இராணிப்பேட்டை மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி வாலாஜா ஊராட்சி ஒன்றியம் முகுந்த ராயபுரம் ஊராட்சி அக்ராவரம் கிராமத்தில் ரூ.1.10கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 வளர்ச்சி திட்டப் பணிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து, மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.27.80 லட்சம் கடன் உதவிகளை வழங்கினார். உடன் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா, ஒன்றியக் குழுத் தலைவர் சேஷா வெங்கட்ரமணன், துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், வாலாஜா ஊராட்சி ஒன்றிய ஊராட்சி மன்றத் தலைவர்களின் கூட்டமைப்புத் தலைவர் ஏ.கே.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) சென்னை கோபாலபுரத்தில் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமியின் இறுதி கட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கடலூர் மாவட்டத்தில் 36 இடங்களில் முதல்வர் மருந்தகம் திறப்பு!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

கடலூர், பிப். 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக கடலூர் மாவட்டத்தில் 36 இடங்களில் முதல்வர் மருந்தகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வர் மருந்தகத்தினை காணொலி காட்சி வாயிலாக நேற்று (24.2.2025) திறந்து வைத்ததை தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் குறிஞ்சிப்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் முதல்வர் மருந்தகத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 15.08.2024 அன்று சுதந்திரதின விழா சிறப்புரையில் 1000 முதல்வர் மருந்தகங்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்கள் மூலம் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் மானிய வசதி மற்றும் கடன் உதவியோடு தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று (24.02.2025) முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக 1000 முதல்வர் மருந்தகங்களை திறந்து வைத்துள்ளார்.

அந்த வகையில் கடலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் 13 சங்கங்கள் மற்றும் 23 தொழில் முனைவோர்கள் மூலம் வடகைலாசம் (பண்ருட்டி), அங்குசெட்டிப்பாளையம் (பண்ருட்டி), வீரப்பெருமாநல்லூர் (பண்ருட்டி), குறிஞ்சிப்பாடி, மஞ்சக்குப்பம் (கடலூர்), குமராட்சி, பரங்கிப்பேட்டை, கீழ்புவனகிரி, மங்கலம்பேட்டை, விருத்தாசலம், வேப்பூர், திட்டக்குடி, மங்கலூர், எல்.என்.புரம் (பண்ருட்டி), நெய்வேலி, சி.தண்டேஸ்வரநல்லூர் (சிதம்பரம்), (வல்லம்படுகை) சிதம்பரம், வடக்குமாங்குடி (காட்டுமன்னார்கோயில்), கூத்தூர் (காட்டுமன்னார்கோயில்), லால்பேட்டை, சோழத்தரம் (ஸ்ரீமுஷ்ணம்), மஞ்சக்கொல்லை, சி.முட்லூர், மேல்புவனகிரி, சிதம்பரம் நகராட்சி, ஓரத்தூர் (சிதம்பரம்), பரங்கிப்பேட்டை, பி.முட்லூர், ரெட்டகுறிச்சி (வேப்பூர்), விளங்கட்டூர் (விருத்தாசலம்), பாலக்கொல்லை (விருத்தாசலம்), பெரியகோட்டு முல்லை, பாலக்கொல்லை (விருத்தாசலம்) திட்டக்குடி, சேமகோட்டை (பண்ரூட்டி), இருப்புகுறிச்சி (விருத்தாசலம்) ஆகிய 36 இடங்களில் இன்று முதல் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் மருந்தகங்கள் செயல்பட உள்ளது.

முதல்வர் மருந்தகம் மூலம் அனைத்து ஜெனரிக் மருந்துகளும் 20% முதல் 90% வரை குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட உள்ளது. மேலும், சித்தா (இம்ப்காப்ஸ், டாம்கால்) ஆயுர்வேதம், யுனானி மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் நியூட்ராசூட்டிக்கல் மருந்து வகைகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட உள்ளது.

காய்ச்சல் மாத்திரை (Paracetamol (650Mg)/Strip) இதர மருந்தகங்களில் 15 ரூபாய் விலைக்கும், முதல்வர் மருந்தகத்தில் 6.30 ரூபாய் விலைக்கும், சத்து மாத்திரை (Calcium vitaminD3/Strip) இதர மருந்தகங்களில் 10.00 ரூபாய் விலைக்கும், முதல்வர் மருந்தகத்தில் 6.00 ரூபாய் விலைக்கும், சர்க்கரை நோய்க்கான மாத்திரை (Metformin 500 mg/Strip) இதர மருந்தகங்களில் 10.00 ரூபாய் விலைக்கும், முதல்வர் மருந்தகத்தில் 5.94 ரூபாய் விலைக்கும், (Glime piride (3Mg)/Strip) இதர மருந்தகங்களில் 24 ரூபாய் விலைக்கும், முதல்வர் மருந்தகத்தில் 5.94 ரூபாய் விலைக்கும் என பல்வேறு விதமான மருந்து,மாத்திரைகள் இதர மருந்தகங்களை விட குறைவான விலையில் முதல்வர் மருந்தகத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் புதிதாக திறக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தில் குறைந்த விலையில் மருந்துகள் பெற்று பயனடைய வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 21.02.2025 அன்று கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக 10 சிறப்பு திட்டங்களை அறிவித்தார். அதில் குறிப்பாக குறிஞ்சிப்பாடியில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வழங்கியதற்கு மாவட்டத்தின் சார்பாகவும், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்தார்.

ஃபெஞ்சல் மற்றும் கனமழையினால் ஏற்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு பாதிப்புகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கான நிவாரணத் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிமன்ற தலைவர் கோகிலா குமார், துணைத் தலைவர் ராமர், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் வ.சி.கோமதி, துணைப் பதிவாளர் வெ.துரைசாமி மற்றும் கூட்டுறவுத் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு நகரக் கழகச் செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார் தலைமையில் நடந்த மாபெரும் தி.மு.க. பொதுக் கூட்டத்தில் ஏழை–எளிய மக்கள் 2 ஆயிரம் பேருக்கு எரிவாயு அடுப்புகளை நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். இதில் நகராட்சி தலைவர் உமாபாய் சிவாஜி கணேசன், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், திருப்பத்தூர் எம்.எல்.ஏ. அ.நல்லதம்பி, மாவட்ட துணைச் செயலாளர் டி.கே.மோகன், சாந்தி சீனிவாசன், மாவட்டப் பொருளாளர் ஜோதி ராஜன், முத்தமிழ்ச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நகரச் செயலாளர் வி.எஸ்.சாரதி தலைமை!

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் 2 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

திருப்பத்தூர், பிப். 25-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு சந்தை மைதானத்தில் நகர கழகச் செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் தலைமையில் மாபெரும் தி.மு.க. பொதுக் கூட்டம் நடந்தது.

மாவட்ட இலக்கிய அணி தலைவர் எம்.பி.சண்முகம் அனைவரையும் வரவேற்று பேசினார். தலைமைக் கழக பேச்சாளர் திருப்பத்தூர் ரஜினி சிறப்புரையாற்றினார் .

இதில் சிறப்பு அழைப்பாளராக பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, வாணியம்பாடி நகரம் தி.மு.க. கோட்டையாக இருந்து வருகிறது. தமிழக மக்களுக்காக நடைபெற்று வரும் இந்த அரசு பல்வேறு சிறப்பு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது என பேசினார்.

தொடர்ந்து வாணியம்பாடி நகரத்திற்கு உட்பட்ட 2 ஆயிரம் ஏழை - எளிய குடும்பங்களுக்கு எரிவாயு அடுப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் வாணியம்பாடி நகராட்சி தலைவர் உமாபாய்சிவாஜிகணேசன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், முன்னாள் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் முத்தமிழ்ச் செல்வி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், சாந்தி சீனிவாசன் மாவட்ட பொருளாளர் கே.பி.ஜோதி ராஜன், திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், ஆம்பூர் நகர செயலாளர் எம்.ஆர்.ஆறுமுகம், ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர்கள் வி.எஸ்.ஞான வேலன், ப.ச. சுரேஷ்குமார், எஸ்.கே.சதிஷ்குமார், கவிதா தண்டபாணி, கே.உமாகன்ரங்கம், கே.ஏ.குண சேகரன், கே.முருகேசன், டி.அசோக்குமார், கே.மோகன்ராஜ், க.ராம மூர்த்தி, த.முரளி, ஆலங்காயம் நகர செயலாளர் ம. ஸ்ரீதர், உதயேந்திரம் பேரூர் செயலாளர் ஆ.செல்வராஜி, நாட்றம்பள்ளி பேரூர் செயலாளர் எஸ்.உமாசந்திரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் டி.சந்திரசேகர், செயற்குழு உறுப்பினர்கள் கு.ராஜ மாணிக்கம், சி.சத்தியமூர்த்தி,எம்.அசோகன், ஆர்.டி.சாமுவேல் செல்லப்பாண்டியன், ஆ.மோகன்ராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் டி.ரகுநாத்,சு.அரசு,எஸ்.சாமண்ணன், மே.சத்தியநாராயணன், ம.குணசேகரன், பஷீர் அகமத், கோவிந்தம்மாள் ஆலங்காயம் ஒன்றிய குழு தலைவர் பி.சங்கீதா பாரி, பேரூர் தலைவர்கள் ஆ.பூசாராணி, தமிழரசி, திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஜி.பிரியதர்ஷினி ஞானவேலன், மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழகம் முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள்!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு!

சென்னை, பிப். 25 -

தமிழ்நாடெங்கும் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் 39 மாவட்டங்களில் முதல்கட்டமாக கூட்டுறவு சங்கத்தின் மூலம் 500 மருந்தகங்களும், தொழில் முனைவோர் மூலம் 500 மருந்தகங்களும் என மொத்தம் 1000 மருந்தகங்களை தமிழ்நாடு முதலமைச்சர் இன்று திறந்து வைத்துள்ளார். பிற மருந்தகங்களை ஒப்பிடும்போது முதல்வர் மருந்தகத்தில் மருந்துகளின் விலை 75 சதவிகிதம் வரை குறைந்த விலையில் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பத்தினரின் மருத்துவச் செலவிற்கான சுமை பெரிய அளவில் குறையும். அத்தோடு பி.பார்ம், டி.பார்ம் படித்துள்ள மாணவர்களும், தொழில்முனைவோர்களும் இந்த திட்டத்தில் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. இம்மருந்தகங்களில் உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் குறைந்த விலையில் கிடைப்பதை படிப்படியாக தமிழக அரசு உறுதி செய்திட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

மக்கள் நலனில் அக்கறை கொண்டு இந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுளளார்.

செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் செஞ்சி தொகுதி தேர்தல் பொறுப்பாளர் அப்துல் மாலிக், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார் நெடுஞ்செழியன் சீனி சின்னராஜ் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

கருநாடக மாநில தி.மு.க. சார்பில்

தமிழ்நாடு முதல்வர் பிறந்தநாள்!

ந.இராமசாமி அறிக்கை!

பெங்களூரு, பிப். 25 -

கருநாடக மாநில தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது ஆண்டு பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெறுகிறது.

இதுகுறித்து மாநில அமைப்பாளர் ந.ராமசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட மாடல் அரசியல் வித்தகர், மக்கள் போற்றும் நல்லாட்சி தரும் அரசியல் ஒளிவிளக்கு தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72வது ஆண்டு பிறந்த நாள் விழா 1.3.2025 - சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு மாநில தி.மு.க கலைஞரக வளாகத்தில் கழக இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து, கேக் வெட்டி அனைவருக்கும் இணிப்பு வழங்கி விழா நடைபெறுகிறது.

விழாவில் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர் கலந்து கொள்ளும் பிறந்த நாள் விழா கூட்டத்தின் தேதி, இடம் பிறகு அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (24.02.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் சட்டமன்ற அறிவிப்புகளின் தற்போதைய நிலை, நேரடி நெல் கொள்முதல், கொள்முதல் செய்யப்படும் நெல்லினை தாமதிக்காமல் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வு செய்தல், பொதுவிநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முகசுந்தரம், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.